**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: ohararm@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170808T

**துறைமுக மற்றும் சுங்கப் பாதுகாப்பு பயிற்சி வழங்கிய அமெரிக்கத் தூதரகம்**

**கொழும்பு, ஆகஸ்ட் 8:** ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல், ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வரைஇலங்கை, மாலைதீவுகள், மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 18 சுங்க மற்றும் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஏற்றுமதி கட்டுப்பாட்டு மற்றும் சம்பந்தப்பட்ட எல்லைப் பாதுகாப்பு (EXBS) நிகழ்ச்சியானது கொழும்பில் பயிற்சி வழங்கியது. கொழும்பில் நடந்த இந்த பயிற்சிக்கு EXBS ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

அனைத்து வகையான சட்ட விரோத பொருட்கள் இறக்குமதியினை பரிசோதித்தல், அடையாளம் காணல் குறித்த நவீன தொழிநுட்ப முறைகள் தொடர்பில் கற்பதற்கு இந்த நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு சந்தர்ப்பம் கிட்டடியது. அதனைத் தவிர இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சரக்கு கையாளல், பொருட்களின் தொகையை இலக்கு வைத்த மதிப்பீடு செய்தல், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்களை கையாளல் போன்ற புதிய திறன்களை விருத்தி செய்வதற்கும் அவர்கள் இதன் போது சந்தர்ப்பம் கிடைத்தது. பேரழிவு ஆயுதங்கள் (WMD) கொண்ட கொள்கலன்கள் தொடர்பில் மற்றும் மேம்பட்ட வெடிக்கும் சாதனங்கள் மற்றும் பொருட்கள் சார்பில் துறைமுக பாதுகாப்பு விழிப்புணர்வையும் பயிற்சி சுட்டிக்காட்டியது.

பிராந்திய சமாதானம் மற்றும் நிலைபேற்றினை அச்சுறுத்தக் கூடிய WMDஇனை செறிவூட்டல் மற்றும் பாரம்பரிய ஆயுதங்களை பரிமாற்றல் என்பவற்றை தடுப்பதனை EXBS இலக்காகக் கொண்டுள்ளது. துறைமுகம், எல்லைக் கட்டுப்பாடு மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு சாதனங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் சட்ட அல்லது ஒழுங்குமுறை தொழிநுட்ப உதவி என்பதிலிருந்து, பரந்தளவிலான செறிவூட்டமை மூலோபாய வர்த்தக கட்டுப்பாட்டு உதவி நிகழ்ச்சிகளை EXBS நிகழ்ச்சி உள்ளடக்கியுள்ளது.

# # #